4. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

Thiru T. VENKATA REDDY : Hon'ble Deputy Speaker Sir, on behalf of the Chairman of the Committee on Public Accounts, I present the following Reports of the Committee :

1. Forty-sixth Report of the Committee on the paragraphs pertaining to Public Works Department in the Report of the Comptroller and Auditor General of India for the year 1980-81 (Civil).

2. Forty-seventh Report of the Committee on the paragraphs pertaining to Public Works Department in the Report of the Comptroller and Auditor General of India for the year 1981-82 (Civil).

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கையை நான் இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை குறித்த பத்திகள் மீதான மேற்படி குழுவின் நாற்பத்தெட்டாவது அறிக்கை.

5. வரவு-செலவுத் திட்டம், 1987-88, பொது விவாதம்—தொடர்ச்சி.

திரு. ஜி. கே. ஜே. பாரதி: மாண்புமிகு சட்டப் பேரவையின் தலை நாயகர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை பற்றி பேசுகின்ற வாய்ப்பு தந்தமைக்கு காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக நன்றியையும், வணக்கத்தையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தாயாக நின்று, கருணையாக நிதியை அள்ளித் தருவதில் சிறப்புடையவர்கள். எப்படிப்பட்ட தாய் என்று மாணிக்கவாசகப் பெருந்தகை சொல்லுகிறபோது, "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து" என்று சொல்லுகிறார். குழந்தை அழாமலேயே, பால் கொடுக்க வேண்டுமென்று எண்ணுபவள் ஒரு தாய். குழந்தை அழுத பின்னாலே, பால்